**தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை - 2019**

---

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 17 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 20(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என கருதுகின்ற மீளாய்வாண்டின் அதிகார சபையின் செயற்படுநிலை தொடர்பாக எனது அவதானிப்புக்கள் மாத்திரம் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் ஆளுனர் தரப்பினரினதும் பொறுப்புக்கள்**

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனத்தால் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்த மற்றும் காலரீதியில் நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சுய வருமானம், செலவினம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய பிரகாரம் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 16(2) இன் பிரகாரம் சகல கணக்காய்வு நடவடிக்கைகளும் மேற்கொள்கின்ற நிறுவனம் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகளின் மூலம் காண்பிக்கின்ற வகையில் காலஎல்லையில் அந்த நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அந்த சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் வருடாந்த அறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேர காலத்தில் தயாரிப்பதை உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படுகின்ற நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் கணக்காணித்துக் கொள்ளல் வேண்டும்.

**1.3 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

---

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்குரிய நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கை திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2. கணக்காய்வு அவதானிப்புக்கள்**

---

**2.1 சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள்**

---

அதிகாரசபையினால் இறுதியாக தயாரித்த 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| நிதிக்கூற்றுக்களின் விடயங்கள் | பெறுமதி |
|---|---|
| | ரூபா |
| **சொத்துக்கள்** | |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | 7,476,170 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 154,219,287 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 561,941 |
| மொத்த சொத்துக்கள் | **162,257,398** |
| உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள் | |
| உரிமை மூலதனம் | 49,798,341 |
| **பொறுப்புக்கள்** | |
| நடைமுறையல்லா பொறுப்புக்கள் | 5,919,000 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 106,540,060 |
| மொத்த பொறுப்புக்கள் | **162,257,401** |
| மொத்த வருமானம் | 33,245,125 |
| மொத்த செலவினம் | 29,599,492 |
| மிகை | **3,645,633** |

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2006 இன் 17 ஆம் இலக்க தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதிகாரசபைச் சட்டம் | | | |
| (i) | 13 (ஆ) | வெளிநாட்டு சந்தைகளில் வெற்றியீட்டுவதற்குரிய முறையில் உள்நாட்டு தொழில் முயற்சிகளை சர்வதேச மயப்படுத்தும் நோக்கில் தொழில் முயற்சிகளை இலங்கைக்கு வெளியில் தாபித்தல் மற்றும் அமுல்படுத்துவதை ஆர்வமூட்டுவதற்காக ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | Business Delegation என்ற நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் வெளிநாட்டு தொழில்நுட்பத்தை நாட்டுக்கு கொண்டுவருவதற்கு உள்நாட்டு தொழில் முயற்சிகளை சர்வதேச ரீதியில் செல்லல் அமுல்படுத்தப்பட்டிருந்தது. | உள்நாட்டு தொழில் முயற்சியார்களை சர்வதேச மயப்படுத்தும் நோக்கல் தொழில் முயற்சிகளை இலங்கைக்கு வெளியில் தாபித்தல் மற்றும் அமுல்படுத்துதல் என்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு செயற்படல் வேண்டும். |
| (ii) | 13(எ) | தொழில்நுட்ப அபிவிருத்தி, உற்பத்தி அபிவிருத்தி மற்றும் பேடன்ட் உரித்து வணிக மயப்படுத்துவதற்குரிய ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்தி மேம்படுத்தலுக்காக தொழில்நுட்ப அபிவிருத்தி நிதியமொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொழில் நுட்ப அபிவிருத்தி நிதியத்தை ஆரம்பிப்பதற்காக இலங்கை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்வதற்கான ஜேர்மன் செயற்திட்டம் (giz) மற்றும் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்கும் போது அந்த நிறுவனங்கள் கணிசமான தொகை கோரியிருந்தமையால் பணிப்பாளர் சபையினதும் (முன்னாள் இருந்த) மற்றும் அமைச்சினதும் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதற்கான அங்கீகாரம் கிடைக்காமையினால் அந்த நிதியத்தை ஸ்தாபிப்பதற்கு முடியாதிருந்தது. | சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 | அதிகாரசபைக்கு சொந்தமாக காணப்பட்ட ரூபா 203,890 பெறுமதியான லெப்டொப் மடி கணனிகள் இரண்டு மற்றும் ரூபா 61,900 பெறுமதியான டெப் கணனிகள் இரண்டும் தொலைந்து போயிருந்த போதிலும், அது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அதிகாரசபைக்குரிய லெப்டொப் கணனி இயந்திரங்கள் இரண்டு 2015 ஆம் ஆண்டின் போதும் மற்றும் 2017 ஆம் ஆண்டின் போதும், இரண்டு டெப் கணனிகள் 2019 ஆம் ஆண்டின் போதும் தொலைந்து போயிருந்ததுடன், அது தொடர்பாக இது வரையிலும் ஆரம்ப விசாரணையொன்று 2020.09.09 இற்கு அண்மித்த தினங்களில் நடாத்தப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக முகாமைத்துவத்தின் ஆலோசனையின் அடிப்படையில் நாரஹேன்பிட்ட பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த பொலிஸ் அறிக்கை இது வரையிலும் கிடைத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 395(இ) | வங்கி கணக்கொன்று உள்ள சகல நிறுவனங்களினாலும் ஒவ்வொரு மாத இறுதியிலும் அதன் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக அடுத்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் வங்கி இணக்கக்கூற்று தயாரிக்க வேண்டியிருந்த போதிலும், அதிகார சபையால் 2019 ஆம் | வங்கி இணக்கக் கூற்று தயாரித்தல் காணப்பட்ட ஊழியர்களின் பிரச்சினை மற்றும் பயிற்சி பெற்ற பதவி அணியினர் காணப்படாமையினால் அதனை உரிய மாதங்களில் மேற்கொள்வதற்கு தாமதம் ஏற்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆண்டிற்குரிய வங்கி இணைக்கக் கூற்று தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (iii) | நிதிப் பிரமாணம் 507 மற்றும் 756 | திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருள் மெய்மெய்யாய்வு அறிக்கையொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் பொருள் மெய்மெய்யாய்வு அறிக்கை திகதி வரையிலும் பொருள் மெய்மெய்யாய்வு நடாத்தப்பட்டிருக்க வில்லை. | நிறுவனம் பல்வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டமை (தற்போது அலுவலகம் நடாத்திச் செல்கின்ற கட்டிடமும்) 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பொருள் மெய்மெய்யாய்வு மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. எனினும் தற்போது 2020 ஆம் ஆண்டு முதல் பொருள் மெய்மெய்யாய்வு நடாத்தப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை வரி சட்டம் மற்றும் 2008 சனவரி 01 ஆம் திகதிய 1530/13 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் வர்த்தமாணி பத்திரம் | ரூபா 25,000 தொகைக்கு மேற்பட்ட கொடுப்பனவுகளுக்கான முத்திரைக் கட்டணம் அறவிட வேண்டியிருந்த போதிலும் 72 சந்தர்ப்பங்களின் போது ரூபா 7,325,000 கொடுப்பனவுகளுக்குரிய முத்திரைக் கட்டணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | ரூபா 25,000 தொகைக்கு மேற்பட்ட கொடுப்பனவுகளுக்காக ரூபா 25 ஆன முத்திரைக் கட்டணம் அறவிடப்பட்டல் வேண்டும். |

## 2.3 முற்பண கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வழங்கப்பட்ட முற்பணத்தில் 30 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவு சேமிக்கப்பட்ட 40 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், | இந்த முற்பணம் பிரதேச செயலகம் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களுக்காக | செலவினங்களை சரியாக மதிப்பீடு செய்து முற்பணம் வழங்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதன் பெறுமதி ரூபா 740,195 ஆகும். அது விநியோகிக்கப்பட்ட முற்பண தொகையில் 47 சதவீதம் ஆகும். | வழங்கப்பட்டிருந்ததுடன், அவர்களால் வழங்கப்படுகின்ற பாதீட்டு செலவினத்தை அடிப்படையாகக் கொண்டு உரிய பணம் விடுவிக்கப்படுகின்றது. எங்களால் ஒவ்வொரு செலவினங்களுக்குரிய தேவையான முற்பணத்தை பெற்றுக்கொள்வதற்கு ஆலோசனை வழங்கி முற்பணமாக வழங்கப்படுகின்றது. | |
| (ஆ) | வுழங்கப்பட்ட முற்பண தொகை செலவிடப்படாமல் 03 தினங்கள் முதல் 281 தினங்கள் வரையான காலம் நிறுத்தி வைக்கப்பட்டு முழுமையாக தீர்க்கப்பட்ட 21 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன், அப்பெறுமதி ரூபா 685,960 ஆகும். | முற்பண கட்டுப்பாடு தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | பணிகளை உரிய பிரகாரம் நிறைவேற்றும் வகையில் திட்டமிடப்பட்டு அமல்படுத்த வேண்டியிருந்ததுடன், அமுல்படுத்தப்படாத பணிகளுக்காக விநியோகிக்கப்பட்ட முற்பணம் தாமதமின்றி அறவிடப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

மீளாய்வாண்டில் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட பணிகளின் செயல் முன்னேற்றம் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொருளாதார அபிவிருத்திகாக தொழில் முயற்சியாளர்களின் பங்களிப்பை மதிப்பிடுவதற்கு பிரதேச தொழில் முயற்சி விருது விழாக்கள் 09 மற்றும் தேசிய தொழில் முயற்சி விருது விழாக்களை நடாத்துவதற்காக ரூபா 8,000,000 நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், | அதிகாரசபைக்கு போதியளவான நிதிஏற்பாடு அதிகார சபைக்கு கிடைத்த போதிளயவில் இல்லாமையின் அடிப்படையில் மற்றும் ஆண்டின் இறுதியின் போது நிதி ஏற்பாடு கிடைத்தமையினால் ஐந்து மாகாணங்களுக்கு | நிதிஏற்பாடுகளில் இருந்து முன்னர் கோரப்பட்ட திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதற்காக ரூபா 6,020,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும், 05 மாகாணங்களுக்கு மாத்திரம் விருது விழாக்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன், தேசிய தொழில் முயற்சி விருது விழா 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நடாத்தப்படடிருக்கவில்லை. | மாத்திரம் விருது விழாக்கள் நடத்த வேண்டி ஏற்பட்டிருந்தது, பிரதேச விருது விழாக்களின் மூலம் வெற்றியீட்டிய தொழில் முயற்சியாளர்களுக்கு இடையே தேசிய மட்டத்தில் விருது விழாவை நடாத்துவதற்கு அதிகாரசபை திட்டமிடப்பட்ட போதும் பிரதேச விருது விழா ஆண்டின் இறுதியில் நடாத்தப்பட்டமையினால் அந்த பிரதேச விருது விழா முயற்சியாளர்களின் பெயர் பதிவேட்டை பெற்றுக்கொள்வதற்கு தாமதமடைந்திருந்தது. அதனால் தேசிய மட்டத்தில் விருது விழாவை நடத்துவதற்கு அதிகாரசபைக்கு முடியாதிருந்தது. | |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் வியாபார தரவு முறையை ஸ்தாபிப்பதற்காக ரூபா 1,000,000 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. துறை சார்ந்த சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சியாளர்களின் தகவல்களை உள்ளடக்கிய தரவு முறைமையொன்றை ஸ்தாபித்தல் மற்றும் அந்த முறைமையின் மூலம் தொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்தல் எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன், முறைமை ஸ்தாபிப்பதற்காக கணனிகளை கொள்வனவு செய்து பகிர்ந்தளிக்கும் விழாவிற்காக ரூபா 120,000 செலவிடப்பட்டிருந்தது. எனினும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் வியாபார தரவு முறைமை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | டெப் இயந்திரத்தை பயன்படுத்தி குறுகிய காலத்தில் பல்வேறு வழுக்கள் அறிக்கையில் உள்ளமையினால் சகல இயந்திரங்களையும் சரியான பிரகாரம் பரிசோதனைக்கு உட்படுத்தி வழுக்களை விடுவித்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் டெப் இயந்திரத்தை மீள பெற்று அந்த வழுக்களை இனங்கண்டு வழங்கும் நிறுவனத்தின் ஊடாக மீண்டும் பழுதுபார்த்து மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு அதிக காலம் எடுத்தமையானல் மீளாய்வாண்டின் போது மீள பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ISO சான்றிதழை பெற்றுக் கொள்வதற்காக 2016 ஆம் ஆண்டில் ரூபா 71,762 தொகையும், 2017 ஆம் ஆண்டில் ரூபா 125,000 தொகையும், 2018 ஆம் ஆண்டில் ரூபா 35,880 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 232,642 தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும் 2019 ஆம் ஆண்டின் போதும் ISO சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 500,000 நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ISO சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் ISO சான்றிதழை பெற்றுக் கொள்ள முடியாதிருந்த போதிலும், நிறுவனத்தின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக உரிய நிறுவனத்தின் கொள்கை மற்றும் திட்ட முறைமை நிறுவனத்தில் ஏற்படுத்தப்படும். | திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும். |
| (ஈ) | கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சின் 2018 ஆம் ஆண்டிற்குரிய செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இளைஞர் தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவற்காக மீளாய்வாண்டில் அமைச்சினால் அதிகார சபைக்கு ரூபா 1,140,000 தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் போது எந்தவொரு நிகழ்ச்சித் திட்டமும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் முற்பணமாக (20 சதவீதம்) ரூபா 1.14 மில்லியன் அளவில் அதிகாரசபைக்கு கிடைத்திருந்தது. அதிகாரசபையின் மூலம் தொழிற்பயிற்சி பெறுனர்கள் 100 பேர்களுக்கு பயிற்சியளிப்பதற்கு முடியுமாக இருந்ததுடன், அவர்களுக்குரிய ஒரு பகுதி மாத்திரம் பெறுகை திட்டத்தின் மூலம் கொள்வனவு செய்தவற்கு முடியுமாக இருந்தது. | திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கைத்தொழில் மற்றும் வணிக அபிவிருத்தி அமைச்சில் 2018 ஆம் ஆண்டில் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி Know How | மிகுதி தொகை அமைச்சிலிருந்து மீளளிப்பு செய்துகொள்வதற்கு எழுத்து மூலம் | அதிகாரசபைக்கு மீளளிப்பு செய்யப்பட வேண்டிய |

| | | |
|---|---|---|
| நிகழ்ச்சித் திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக அமைச்சினால் வழங்கப்பட்ட முற்பண தொகையை விஞ்சி ரூபா 2,605,147 தொகை 2019 ஆம் ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்த போதிலும், மேலதிகமாக செலவிடப்பட்ட தொகையை மீளளிப்பு செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும், அந்த பணத்தை மீளளிப்பு செய்துகொள்வதற்கு முடியாதிருந்தது. | பணத்தை தாமதமின்றி மீளளிப்பு செய்தல் வேண்டும். |